அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை: 18/2015 (II)

என இல : EST-7/ALLOW/03/121 Vol.04
அரசாங்க நிர்வாக மற்றும்
முகாமைத்துவ அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07.

2018.02.20

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண பிரதான செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்

**அரச சேவையில் நிறைவேற்றுச் சேவை வகையின் பதவிகளை வகிக்கின்ற அலுவலர்களுக்கு விசேட படி ஒன்றினை வழங்கல்**

2015.06.26 ஆந் திகதி அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 18/2015 மற்றும் 2015.07.13 ஆந் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 18/2015(I) தொடர்பாக தங்களது கவனம் ஈர்க்கப்படுகின்றது.

02. அதற்கமைய அதன் முதலாவது பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள நிறைவேற்றுத் தரத்திற்கான விசேட கொடுப்பனவு செலுத்தும் போது, நிறைவேற்றுத்தர சேவை வகுதியைச் சேர்ந்த பதவியொன்றில் இருந்து இன்னுமொரு சேவை வகுதியைச் சேர்ந்த பதவியொன்றுக்கு முறைப்படி விடுவிக்கப்பட்டுள்ள மற்றும் சேவை இடையீடின்றி புதிய பதவியின் கடமைகளைப் பொறுப்பேற்றுள்ள அலுவலர்களுக்கு, முன்னைய சேவைக் காலத்தையும் ஏற்புடையதாகக் கொண்டு, அவ் விசேட படியை செலுத்துவதற்கு 2017.10.31 ஆந் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின் போது தீர்மானிக்கப்பட்டது.

ஒப்பம்./ ஜே.ஜே. ரத்னசிறி
செயலாளர்
அரசாங்க நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு